# அகதியான போது ..................



-----------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**

**பாகம் 5**

விசேடமாக புத்தளத்தில் யாழ்ப்பாண முஸ்லீம்கள் பலரால் நடத்தப்பட்ட விதம் கவலைக்குரியது.சொந்தமாக தொழில் ஆரம்பித்த யாழ்.முஸ்லீம் இளைஞர்கள் தாக்கபட்டார்கள். ஏன் கொல்லப்பட்டார்கள் படிப்பில் திறமை காட்டிய யாழ்.முஸ்லீம் மாணவர்கள் பலவந்தமாக ஓரங்கட்டப்பட்டனர்.யாழ்.முஸ்லீம் ஆசிரியர்கள் தாக்கப்பட்டார்கள்.தொழில்பொறாமையின் காரணமாக பல ஆசிரியார்கள் அந்தந்த ஊர்களின் ஆசிரியர்களால் மதிப்பு குறைவாக நடத்தப்பட்டனர்.வீதிகளில் வைத்து பட்டப்பகலில் அடித்து காயப்படுத்தப்பட்டனர்.'வந்தான் வரத்தான்' 'பணக்கொட்டையான்' 'வடக்கான்' 'அகதி நாய்கள்' என்பன எமக்கு தென் இலங்கையில் பலரால் சூட்டப்பட்ட புனைப்பெயர்கள்

கொழும்பு சென்று விட்டு தர்கா நகர் வரும் போது 'தம்பி ஊருக்கு பைட்டு வர்றோ.........'என்று எனது அண்டை வீட்டு ஆலிம் கேட்டபோதுதான் நம்மக்களின் அறிவு எந்த அளவுக்கு உள்ளது என்று தெரிந்தது

வடக்கில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு பல காரணங்கள்இருந்த போதும் சில காரணங்களில் ஒன்று கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அநியாயம் தாங்க முடியாமல் வெடித்த ஜிஹாத் அணி மற்றது முன்னாள் அமைச்சர் அஷ்ரப் மீது புலிகளுக்கு இருந்த வெறுப்பு .

நான் ஏற்கனவே கூறியது போல யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்படும் போது புலிகளும் தமிழர்களும் கூடி நின்று கூறியது 'அஷ்ராப்ட போங்க எல்லாம் கிடைக்கும்'என்று வடக்கு முஸ்லீம்களுக்கு விசேடமாக யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு முன்னாள் அமைச்சர் அஷ்ராபிடம் எதிர்பார்த்தது கிடைத்ததா என்றால் இல்லை என்பதுதான் கவலைக்குரிய பதில்;கசப்பான பதில்.

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான அந்த பணக்காரர் மிகவும் கொடைவள்ளல் என்பது அவருக்கு இருந்த பெயர் .வடக்கில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களை அழைத்து ஒருநேர சாப்பாடு கொடுத்து பல புகைப்படங்களை எடுத்து கொடைவள்ளல் பட்டத்தை கொடிகட்டி பறக்க விட்டவர் அந்த மகான்.அகதிகளுக்காக உயிரைகொடுக்கப்போவதாக கூறிய அவர் ,ஒரு நேரச்சாப்பாடோடு களைத்துப்போய் விலாசம் தெரியாமல் போயிருந்தார் அந்த

புண்ணியவான் .

முன்னாள் ஜமாஅத் ஒன்றின் தலைவரும் மௌலவியும் சில விசிலடிச்சான் குஞ்சுகளும் சேர்ந்து வெளிநாட்டில் உள்ள யாழ்.முஸ்லீம் இளைஞர்களின் உதவியுடன் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு நிதி உதவி கொடுக்கப்போவதாக அறிந்து நானும் விண்ணப்பித்தேன்.எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.காட்டப்பட்ட காரணம், எனது தந்தை ஆசிரியன் என்று.அவர் ஆசிரியன் என்பது மட்டும்தான் அவர்களுக்கு தெரிந்ததே தவிர அவரது மாதாந்த ஆயிரம் ரூபா எப்படி ஆறு பேர் கொண்ட குடும்பத்துக்கு போதும் என்று பார்க்கப்படவில்லை.பாணத்துரையில் வாழ்ந்த விசிலடிச்சான் குஞ்சு ஒன்றுக்கு தெரிந்த யாழ்ப்பாண ஆசிரியர் ஒருவரின் மகனது விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு நிதி உதவி வழங்கப்பட்டது.

நீதியும் நியாயமும் எப்படி பொறுப்பில்லாத பச்சோந்திகளின் கைகளில்,தம்மை தாமே தலைவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் தலைவர்களின் கைகளில் கையளிக்கப்படும்போது பந்தாடப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். சிபாரிசுகள் சிரசுக்கு மேல் வைத்து சமூக தலைவர்களால் முன்னுரிமை அளிக்கப்படும் நிலை மாறும் வரை,சமூகத்தில் வறுமை என்பது பொதுவானதாகவே இருக்கும்.

வறுமையின் விளிம்பில் நின்ற எனக்கு கல்விக்காக நிதி உதவி செய்தது கொழும்பில் இருந்த பைத்துல்மாலும் அதைச்சேர்ந்த மேதகு இஸ்ஸதீன் அவர்களும் தான்.அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக ..

இனி மறைந்த முன்னாள் அமைச்சர் அஷ்ரப்பும் முஸ்லீம் காங்கிரசும் யாழ்ப்பாண முஸ்லீம்கள் விடயத்தில் நடந்து கொண்ட விதம் பற்றி பக்கம் பக்கமாக எழுத முடியும்.உண்மை கசப்பானதுதான் .அதற்காக உண்மையை பொய்க்குள் மறைக்க முடியாது

(தொடரும் )